


கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட விழாவை முன்னிட்டு, இத்திட்டம் நிறைவேற முக்கிய காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிசாமி, பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட கழக செயலாளர்கள் தளபதி முருகேசன், இல.பத்மநாபன், கே.ஈஸ்வரசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன், குட்டி (எ) ஆ.சுதாகர், நித்தியானந்தம், மு.ஜெயக்குமார் உள்ளட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தாராபுரம் இடைத்தேர்தலில் முறைகேடாக வாக்குப்பதிவு செய்ய வற்புறுத்தல்!

ஜனநாயக உரிமையை நிலைநாட்டிய அம்மையாருக்கு நன்றி!

தி.மு.க. ஐ.டி.விங் நிர்வாகிகள் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!



தாராபுரம்,அக்.9- தி.மு.க. ஐ.டி.விங்-கின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தாராபுரம் இடைத்தேர்தலில் விருப்பத்திற்கு மாறாக முறைகேடாக வாக்குப்பதிவு செய்ய வற்புறுத்திய தேர்தல் அதிகாரியை கழகத்திற்கே உரிய தீரத்துடன் எதிர்கொண்டு தனது ஜனநாயக உரிமையை நிலைநாட்டிய அம்மையார் திருமிகு. ஜெய்தீன்பாபு அவர்களிடம் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு உரையாடி நன்றி கூறினோம்.

கழகத் தலைவர் அவர்களே அம்மையாரின் துணிச்சலான செயலை குறிப்பிட்டு பாராட்டியதை கூறி மகிழ்ந்தோம், கூடுதலாக விரைவில் தலைவர் அவர்கள் அம்மையாரை சந்திக்க விருப்பமுடன் இருப்பதை அவரது குடும்பத்தாரி டமும் தெரிவித்து அவர்களுக்கும் எங்களது நன்றியையும் வாழ்த்தையும் பகிர்ந்து கொண்டோம்.

அம்மையார் அவர்களை நேரில் சந்தித்து பாராட்டுகளை பகிர்ந்த தி.மு.க. தகவல்தொழில் நுட்ப அணி துணை செயலாளர் பி.கேசவன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் அன்பழகன், தாராபுரம் நகர ஒருங்கிணைப்பாளர் பிரபு, தாராபுரம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன், 10வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் யூசுப், வார்டு செயலாளர் மயில்சாமி, வார்டு பிரதிநிதிகள் ராஜா, சிராஜ் பானு ,மாணவர் அணி முஸ்தபா, ஓட்டுனர் அணி சிந்தனை செல்வன், BLA2 சித்திக் மற்றும் அணியின் உடன் பிறப்புகள் அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

34 ஆம் ஆண்டு நினைவு தினம்

முன்னாள் ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட

தி.மு.க.அவைத்தலைவர்

09.10.2026



திரு.R.கோபால்சாமி

அவர்களின் நினைவுகளுடன் வணங்குகிறோம்...

திரு.கோ.தளபதி Ex.M.L.A.,

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி

செயலாளர் ~ மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.



விழிப்பாய்...

"எதிர்க் கட்சியாக
திமுக இருக்கட்டும்"
என்பதில் இருந்த
மக்களின்
தெளிவு

"ஆளுங்கட்சியாக
அவர்கள் தான்
வரவேண்டும்"
என்பதில்
இல்லை...

ஆம்...
கோட்டு மாடல்
சர்க்கார்

அது எல்லை
தொடாத

குறைப்
பிரசவம்

குழப்பத்தில்
பிறந்த
குழந்தை

மயக்கத்தில்
விளைந்த
மழலை...

தன் வீட்டு
இட்லிக்கு
மாவு போதவில்லை என்று

எதிர் வீட்டு
இடியாப்ப மாவை திருடி

புதுவகையாய்
செய்த
"இட்லியாப்பம்"..

யதார்த்தத்துக்கு
மாறான
பதார்த்தம்...

அது
அபாயம்
என்பதை

காலம்

நூதனமாய்
உணர்த்திய
நூத்தியெட்டு

தங்களால்
முடியாது
என்பதால்

எந்திர தந்திரத்தால்

SIR
மந்திரவாதிகள்

ஏவிய ஏலியன்ஸ்
கூட்டம்

ஏவல்
ஆட்டம்...

களிமண்ணை
பொம்மை
ஆக்கலாம்

உண்மை ஆக்க
முடியாது என்பதை

அது

கண்முன்
காட்டிக் கொண்டிருக்கும்
காமெடியாக்கும்...

ஆம்...

வாழத் தெரியாத
மக்கள்
வடிவமைத்த

ஆளத்தெரியாத
மக்குகளின்

கோமாளிக்
கூடாரம்...

அது
கோட்டுக்கு
மாறியது போல

கோட்டையை
மாற்றப்
பார்க்கிறது

அலை கொண்ட
கடலில்

வலை கொண்டு
வாழும்
மக்களை

அகதிகளாக்கத்
துடிக்கிறது

கருப்பு பொட்டு
கம்பெனி

பொற்கால
தமிழகத்தை

கற்காலம்
நோக்கி கடத்த

கார்ப்பரேட்
ஆட்களோடு

கணக்குப்
போட்டு
அலைகிறது

பட்டினப்
பாக்கத்தை

பார்க்கிங்
கட்டணப்
பிரவேசமாக்க

கனத்த
திட்டத்தோடு

கடற்கரை
பக்கம்
திரிகிறது..

வளையாச்
செங்கோலை
அழி ரப்பராக்கி

வளர்தமிழ்
பூமியின்

பூகோளப்
பெருமைக்கு

"போகி" நடத்தத்
துடிக்கிறது..

விழிப்பாய்
தமிழா
நெருப்பாய்..



—மருது அழகுராஜ்

கழகச் செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்